بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 09/07/2021 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ۞ اَلرَّحْمٰنِ الرَّحِيمِ ۞ مٰلِكِ يَوْمِ الدِّينِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۞

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۞ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ ۞

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு எடுத்துரைக்கப்பட்டு வந்தது. அன்னார் (ரலி) அவர்கள் முறையாக கஸா துறையை ஆரம்பித்து வைத்தார்கள். அனைத்து மாவட்டங்களிலும் நீதிமன்றங்களை ஏற்படுத்தினார்கள். நீதிபதிகளை நியமித்தார்கள். நீதிபதிகளை தேர்ந்தெடுக்கும்போது மார்க்க சட்ட வல்லுனர்களை தேர்ந்தெடுத்தார்கள். மேலும் அவர்களை சோதித்தும் வந்தார்கள். அவர்களுக்கு பெரும் மதிப்புள்ள சம்பளத்தை நிர்ணயித்தார்கள். தீர்ப்பு எடுக்கும்போது எவருடைய ஆளுமையின் கீழும் வராமல் இருப்பதற்காக வசதிபடைத்த, கண்ணியமிக்க நபர்களை நீதிபதியாக தேர்ந்தெடுத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நீதி மற்றும் சமத்துவத்தை எந்த அளவுக்கு கருத்தில் கொண்டார்கள் என்றால், ஒரு முறை ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஏதோ ஒரு பிரச்சினை ஏற்பட்டு அது ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி) அவர்களுடைய நீதிமன்றத்திற்கு சென்றடைந்தது. ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் இரு பிரிவினரையும் வரவழைத்தார்கள். அப்போது ஸைது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கண்ணியம் கொடுத்தார்கள் (அதாவது எழுந்து நின்றார்கள்). இதைக்கண்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இது உம்முடைய முதல் அநீதியாகும் என்று கூறியவாறு, அன்னார் ஹஸ்ரத் உபை (ரலி) அவர்கள் இருந்த இடத்திற்கு சென்று அமர்ந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷரீஅத்தின் சட்ட திட்டங்களை அறியச்செய்யும் பொருட்டு, மார்க்கத் தீர்ப்புகள் வழங்கும் துறையை ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் உபை பின் கஅப் (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் ஸாபித் (ரலி), ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ தர்தா (ரலி) ஆகியோர்களை தேர்ந்தெடுத்தவாறு இவர்களைத் தவிர வேறு எவரிடமிருந்தும் மார்க்கத் தீர்ப்பு கேட்கப்படாது என்று கூறி விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் கண்ணியமிகுந்த ஒரு சஹாபி - அனேகமாக அவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) எனக் கருதுகிறேன் - மக்களுக்கு ஒரு விவகாரம் குறித்து கூறினார்கள். இந்த தகவல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது அன்னார் (ரலி) அவர்கள் உடனடியாக அந்த சஹாபியிடம் விசாரித்தார்கள். நீங்கள் அமீரா? அல்லது மார்க்கத் தீர்ப்பு கொடுப்பதற்காக அமீர் உங்களை நியமித்தார்களா? என்று விசாரித்தார்கள். உண்மை என்னவென்றால், ஒவ்வொருவருக்கும் மார்க்கத் தீர்ப்பு கொடுப்பதற்கான உரிமை வழங்கப்பட்டால் பல்வேறு இன்னல்களை அது உருவாக்கிவிடும். பல்வேறு மார்க்க தீர்ப்புகள் பொதுமக்களுக்கு சோதனைக்கான காரணியாக அமையக்கூடும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நாட்டில் அமைதியை நிலைநாட்டவும், கடை வீதியை கண்காணிப்பதற்காகவும் காவல்துறையை உருவாக்கினார்கள். முறையாக சிறைச்சாலைகளை கட்டினார்கள். ஹிஜ்ரி 15 ஆம் ஆண்டில் பஹ்ரைனில் இருந்து 5 லட்சம் தொகை வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சஹாபாக்களின் ஆலோசனையின் பேரில் மதீனாவில் பைத்துல் மாலை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அர்க்கம் (ரலி) அவர்களை கருவூலத்தின் அதிகாரியாக நியமித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கட்டடங்களைக் கட்டும் விஷயத்தில் சிக்கனமாக நடந்து கொள்வார்கள். ஆனால் அன்னார் (ரலி) அவர்கள் பைத்துல்மாலுக்காக மிகவும் ஆடம்பரமான கட்டடங்களை கட்ட செய்தார்கள். மேலும் அவற்றில் காவலாளிகளை நியமித்தார்கள்.

ஒரு முறை கடும் வெப்ப காலத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தம்மால் விடுதலை செய்யப்பட்ட அடிமையுடன் நஜதை நோக்கி செல்லக்கூடிய வழியில் இருக்கும் ஆலியா எனும் பள்ளத்தாக்கில் இருந்தார்கள். அப்போது முன்னால் ஒரு மனிதர் இரண்டு இளம் ஒட்டகங்களை ஓட்டி வருவதை கண்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், இந்த நபருக்கு என்னவாயிற்று? இவர் மதீனாவில் இருந்திருக்கலாமே. வெப்பம் தணிந்த பிறகு அவர் வெளியேறி இருந்தால் அவருக்கு நன்றாக இருந்திருக்குமே! என்று கூறினார்கள். அந்த நபர் அருகில் வந்ததும் அவர் அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) என்று தெரியவந்தது. ‘ஸதகாவின் ஒட்டகங்களுள் இந்த இரு ஒட்டகங்கள் பின் தங்கி விட்டன. இந்த இரண்டும் தொலைந்து விடக்கூடும்; மேலும், அல்லாஹ் என்னிடம் இதைக்குறித்து விசாரிப்பான் என்ற அச்சம் எனக்கு இருந்தது’ என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எவர் வலிமை மிக்க நம்பிக்கைக்குரியவரை காண விரும்புகிறாரோ அவர் இந்நபரை (அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை) பார்த்துக் கொள்ளட்டும்.

இன்னொரு அறிவிப்பில் வருகிறது. உமர் பின் நாஃபி அவர்கள் அபூபக்ர் ஈசா அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப், ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான், ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) ஆகியோருடன் சதகாவின் நேரத்தில் வந்தேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நிழலில் அமர்ந்து விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவருக்கு அருகில் நின்று கொண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறக்கூடிய விஷயங்களை அவரிடம் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தார்கள். கடும் வெப்பமான பகலாக இருந்தபோதிலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வெயிலில் நின்று கொண்டிருந்தார்கள். அன்னாரிடம் இரு போர்வைகள் இருந்தன. ஒன்றை கீழாடையாக கட்டியிருந்தார்கள். இன்னொன்றை தலையில் போட்டிருந்தார்கள். மேலும், ஸதகாவின் ஒட்டகங்களை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒட்டகங்களுடைய நிறம், அவற்றின் வயது ஆகியவற்றை எழுதிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பார்த்து, அல்லாஹ்வுடைய வேதத்தில் ஹஸ்ரத் ஷுஐப் (அலை) அவர்களின் மகளின் இக்கூற்றை நீங்கள் கண்டுள்ளீர்களா? என்று வினவியவாறு, اِنَّ خَيْرَ مَنِ اسْتَاْجَرْتَ الْقَوِىُّ الْاَمِيْنُ “நீர் யாரை வேலைக்கு வைத்தாலும் அவர்களுள் வலிமைமிக்க, நம்பிக்கைக்குரியவரே வேலைக்கு வைத்துக் கொள்ளும் பணியாளர்களுள் மிகச்சிறந்தவர்.” என்ற வசனத்தைக் குறிப்பிட்டு விட்டு ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சுட்டிக்காட்டியவாறு, இவரே அந்த வலிமைமிக்க நம்பிக்கைக்குரியவர் என்று கூறினார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பைத்துல்மாலில் இருந்து சிலவற்றை பங்கிட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அன்னாருடைய பெண் குழந்தை வந்தது. அவள் ஒரு திர்ஹமை எடுத்து வாயில் போட்டு விட்டாள். ஹஸ்ரத் உமர் (ரலி)

அவர்கள் வாயில் விரலை போட்டு அந்த திர்ஹமை வெளியே எடுத்தார்கள். அத்துடன், மக்களே! பொது முஸ்லிம்களுக்கு இருக்கின்ற அதே அளவு உரிமைதான் உமர் மற்றும் அவருடைய குடும்பத்திற்கு உள்ளது என்று கூறினார்கள்.

இதேபோன்று ஒரு முறை ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் பைத்துல்மாலில் துடைப்பத்தை கொண்டு சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அங்கு ஒரு திர்ஹம் கிடைத்தது. அப்போது எதேச்சையாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு சிறு குழந்தை அந்த இடத்தை கடந்து சென்றது. அபூ மூஸா அவர்கள் அந்த திர்ஹமை அந்த குழந்தைக்கு கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குழந்தையினுடைய கையில் திர்ஹமை கண்டு விட்டார்கள். குழந்தையிடம் விசாரித்தார்கள். பிறகு அபூ மூஸா அவர்களைப் பார்த்து, அபூ மூஸாவே! மதீனாவாசிகளில் உமருடைய குடும்பத்தாரின் வீட்டைத் தவிர இழிவான ஒரு வீடு உமக்கு தென்படவில்லையா? என்று கேட்டவாறு, முஹம்மதிய சமுதாயத்தில் இந்த அநீதியைக்குறித்து நம்மிடம் விசாரிக்காத எவரும் இருக்கக்கூடாது என்று நீங்கள் விரும்புகிறீர்களா? என்று கேட்டார்கள்.

மக்கள் நலப் பணியாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு தண்ணீருக்கான ஏற்பாடு செய்து கொடுப்பதற்காக நதிகளை தோண்ட செய்தார்கள். ஹிஜ்ரி பதினெட்டாம் ஆண்டில் பஞ்சம் ஏற்பட்டபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டளைக்கிணங்க ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஃபுஸ்தாது எனும் இடத்திலிருந்து செங்கடல் வரை நதிகளை தோண்டினார்கள். அதன் வாயிலாக கப்பல்கள் மதீனாவின் துறைமுகமான ஜித்தா வரை வந்தடைந்தது. அதேபோன்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பொதுமக்களின் வசதிக்காக பள்ளிவாசல்கள், நீதிமன்றங்கள், இராணுவ முகாம்கள், இராணுவக் குடியிருப்புகள், பாதைகள், பாலங்கள், விருந்தினர் மாளிகைகள், சோதனைச் சாவடிகள் ஆகியவற்றை கட்டினார்கள்.

ஃபுஸ்தாது, பஸ்ரா, கூஃபா போன்ற பல்வேறு புதிய நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இராணுவத்தை ஒழுங்குபடுத்தி அதை கட்டமைத்தார்கள். தரவரிசைக் கேற்ப இராணுவ வீரர்களுக்கான சம்பளத்தை நிர்ணயித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு, இராணுவத்திற்கு பயிற்சி கொடுப்பதில் அதிக அக்கறை இருந்தது. ஆகவே அன்னாருடைய வலியுறுத்தப்பட்ட கட்டளைக்கேற்ப, வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளில் எந்த ஒரு இராணுவ வீரரும் விவசாயமோ அல்லது வியாபாரமோ செய்யக்கூடாது என்று கூறப்பட்டிருந்தது.

தற்காலத்தில் முஸ்லிம் நாடுகளில் இராணுவ வீரர்கள் வியாபாரங்களில் மூழ்கியுள்ளனர். ஒரு நாட்டைக் குறித்து எந்த அளவுக்கு கூறப்படுகிறது என்றால், கமிஷன் வாங்கிய உடனேயே மனை நிலத்தை எங்கு ஒதுக்கீடு செய்வது என்று அதிகாரிகள் பார்க்கிறார்கள். இவ்வாறு அவர்களுடைய இராணுவ திறன்கள் குறைந்துகொண்டே செல்கின்றன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய கிலாஃபத் காலகட்டத்தில், குளிர் மற்றும் கோடை பிரதேசங்களின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முன்பு தட்பவெட்ப நிலை கருத்தில் கொள்ளப்பட்டது. இராணுவ வீரர்களுக்கு கடுமையான பயிற்சியும், இராணுவ உபகரணங்களும் கொடுக்கப்பட்டன.

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் பிற சமுதாயத்து மக்களும் பெரும் பெரும் பதவி வகித்தனர். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் யுத்த துறையை விரிவுபடுத்தினார்கள். அதற்கென குறிப்பிட்ட சமுதாயமோ நாடு ஒதுக்கப்படவில்லை. மாறாக தன்னார்வ படையில் ஆயிரக்கணக்கான மஜூஸிகள் இணைந்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் பிற சமுதாயத்து மக்கள் போர் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டார்கள் என்பது வரலாற்றிலிருந்து நிரூபணமாகிறது.

பொருட்களின் விலையை தகாத முறையில் குறைப்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கடுமையாக தடை செய்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்

கூறுகிறார்கள்: தகாத முறையில் பொருட்களின் விலையை அதிகரிப்பதையும், அதேபோன்று பிறருக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவதற்காக தகாத முறையில் விலையை குறைப்பதையும் இஸ்லாம் தடை செய்துள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கல்வித்துறையை மிகவும் மேம்படச் செய்தார்கள். எல்லா நாடுகளிலும் கல்விக்கூடங்களை நிறுவினார்கள். அவற்றில் திருக்குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமிய மார்க்க சட்டங்கள் ஆகியவை கற்றுக் கொடுக்கப்பட்டன. ஆலிம்களாக இருந்த சஹாபா பெருமக்கள் கல்வி மற்றும் ஒழுக்கப் பயிற்சிக்கு நியமிக்கப்பட்டார்கள். மேலும், கற்றுக் கொடுக்கக் கூடியவர்களுக்கு சம்பளமும் நிர்ணயிக்கப்பட்டன.

ஹிஜ்ரி காலண்டரின் தோற்றம். இறைவனின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்ற ஆண்டிலிருந்து அதன் வருடம் ஆரம்பமானது. இந்த காலண்டர் எப்போது உருவாகியது என்பதைக் குறித்து பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. சிலர் ஹிஜ்ரி 16 ஆம் ஆண்டு ஆரம்பமானது என்று கூறுகின்றனர். சிலரைப் பொறுத்தவரை ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டோ அல்லது ஹிஜ்ரி 18 ஆம் ஆண்டோ அல்லது ஹிஜ்ரி 21 ஆம் ஆண்டோ இந்த காலண்டர் உருவானதாக கருதுகிறார்கள்.

இஸ்லாமிய நாணயத்தைக் குறித்து பொதுவான வரலாற்று ஆசிரியர்களின் கருத்து என்னவென்றால், முதன்முதலாக அப்துல் மலிக் பின் மர்வான் என்பவருடைய காலத்தில் ஆரம்பமானது என்று கூறுகிறார்கள். ஆனால் மதீனாவின் சில வரலாற்றாசிரியர்கள் கூறுவது என்னவென்றால், இஸ்லாமிய நாணயம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஆரம்பமானது. அவற்றின் மேலே அல்ஹம்துலில்லாஹ் என்று பதிக்கப்பட்டிருக்கும் என்றும், சிலவற்றில் முஹம்மது ரசூலுல்லாஹ் என்றும், சிலவற்றில் லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு என்று பதிக்கப்பட்டு இருந்ததாக கூறுகிறார்கள். ஒரு ஆய்வின் அடிப்படையில், முதன்முதலாக இஸ்லாமிய நாணயம் டமாஸ்கஸில் ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு புழக்கத்தில் விடப்பட்டதாக தெரிய வருகிறது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் தோன்றிய புதிய விஷயங்களை வரலாற்றாசிரியர்கள் 'அவ்வலியாத்' என்ற பெயரால் அழைக்கின்றனர். அல்லாமா ஷிப்லீ நுஃமானீ அவர்கள் தமது நூலான அல் ஃபாரூக் என்பதில் ஏறக்குறைய 44 அவ்வலியாத்களை குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றைத்தவிர ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அவ்வலியாத்துகள் இன்னும் உள்ளன. அவற்றை எழுதினால் நீண்டதாக ஆகிவிடும் என்ற அச்சத்தின் காரணமாக இத்தோடு நிறுத்துகிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

*ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு இனிவரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும் என்று கூறியவாறு ஹுஸூர் அவர்கள் ஆறு மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்து அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைக்கப்படும் என்று கூறினார்கள்.*

1) இந்தோனேசியாவை சார்ந்த மதிப்பிற்குரிய சுரிப்தோ ஹாதி ஸிஸ்வோயோ (SURIPTO HADI SISWOYO) சாஹிப். 2) நங்கானா மாவட்டத்தைச் சார்ந்த அல்லாஹ் தாத் சாஹிப் அவர்களின் மகனாகிய மதிப்பிற்குரிய சவுத்ரி பஷீர் அஹமது சாஹிப். 3) தாருன் நஸ்ர் மேற்கு ரப்வாவைச் சார்ந்த சவுத்ரி அல்லாஹ் ரக்கா மல்ஹீ சாஹிபின் மகனாகிய மதிப்பிற்குரிய ஹமீதுல்லாஹ் காதிம் மல்ஹீ சாஹிப். 4) பெஷாவரைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது அலீ கான் சாஹிப். 5) அமெரிக்கா மேரிலேண்ட்டைச் சார்ந்த மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதா மஹ்தீ லத்தீஃப் சாஹிப். இவர் மர்ஹூம் ஹஸ்ரத் சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீது (ரலி) அவர்களின் மகன் வழி பேரன் ஆவார்கள். 6) ரப்வா பிரைவேட் செக்ரடரி அலுவலகத்தின் பணியாளரான ஷெஹ்ஸாத் அக்பர் சாஹிப் அவர்களின் மகனாகிய ஃபய்ஸான் அஹ்மத் சமீர் என்பவர்.

*ஹுஸூர் அவர்கள் அனைத்து மர்ஹூம்களின் பாவ மன்னிப்பு மற்றும் உயர் அந்தஸ்துக்காக துஆ செய்தார்கள்.*

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**